இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 08.07.2026



# கரூரில் தீர்க்க வேண்டிய கணக்கு என்ன?

திருடனே, 'திருடன் … திருடன்' என பிடிக்க ஓடியதைப் போல – கரூரில் 41 பேர் பலிக்கு காரணமானவர்கள், 'கரூரில் தீர்க்க வேண்டிய கணக்கு இருக்கிறது' என்று கனைப்பதைப் பார்க்கும் போது இவர்கள் மக்களை எவ்வளவு மடையர்களாக நினைக்கிறார்கள் என்றே கேட்கத் தோன்றுகிறது. 'வாழும் மக்களுக்கு மூளை இல்லை' என்று நினைக்கும் கும்பலாக விஜய் கும்பல் இருக்கிறது.

"கரூரில் போலீஸ்காரர்களை வைத்து இத்தனை பேரைக் கொன்று விட்டு எங்கள் மீது பழிபோடுகிறார்கள். எங்களுக்கு கரூரில் தீர்க்க வேண்டிய ஒரு கணக்கு இருக்கிறது" என்று அரசியலமைப்பு சட்டத்தின் பால் பதவி ஏற்றுக் கொண்ட அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசுகிறார். என்ன கணக்கு இருக்கிறது? கரூர் காவலர்கள் அனைவரையும் அழிக்கப் போகிறீர்களா? கரூரையே காவு வாங்கப் போகிறீர்களா? போலீஸ் துறையை வைத்திருக்கும் முதலமைச்சர் விஜய் கருத்தா இது?

இப்படி ஆதவ் அர்ஜுனா பேசியதும் சமூக வலைதளத்தில் காறி துப்பினார்கள் மக்கள்.

எது கரூர் கணக்கு?

* **ஒட்டு மொத்தக் கட்சியும் தலைமறைவா ஓடி ஒளிஞ்சிங்களே… அதுவா?**
* **கரூரில் மக்களோடு நிற்காமல் தலை தெறிக்க ஓடினீங்களே, அதுவா?**
* **ஆடியோ லாஞ்சில் குத்தாட்டம் போட்டீங்களே, அதுவா?**
* **CBI விசாரணைக்குப் போனீங்களே, அதுவா?**
* **பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்க்காமல், பஸ் வைத்து உங்களைப் பார்க்க வரவழைத்தீங்களே… அதுவா?**
* **இன்று பா.ஜ.க.வை எதிர்த்து ஒரு கேள்வி கூட கேட்க முடியாத நிலையில் இருக்கிறீங்களே… அதுவா?**
* **இவ்வளவு நாள் கரூர் பக்கமே எட்டிப் பார்க்காமல் இப்போது கரூர் இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்குப் போகிறீங்களே, அதுவா?**

– என்று மக்கள் கேட்கிறார்கள். இதில் ஒரு கேள்விக்காவது பதில் சொல்ல துப்பு உண்டா?

கரூரில் நடந்தது பச்சைப்படுகொலைகள் ஆகும். படம் சூட்டிங் எடுப்பதற்காக நடத்திய சதிச் செயலில் நடந்த உயிர் பலிகள் ஆகும். சொன்ன நேரத்துக்கு வராமல் மக்களைக் காக்க வைத்து, சோறு தண்ணீர் இல்லாமலும் கூட்டத்தை அதிகமாக்கி மூச்சுத்திணற வைத்து திட்டமிட்டு நடத்தியது ஆகும். விஜய்க்காக, விஜய்யால், விஜய்யைச் சுற்றி இருந்தவர்களால் நடத்தப்பட்டது இது. பலியானதும் விஜய் ரசிகர்கள். விஜய் என்றால் யாரென்று தெரியாத குழந்தைகள்.

மதியம் 12 மணிக்கு விஜய் கரூருக்கு வரப்போகிறார் என்று காலை 9 மணி முதல் அனைத்து தொலைக்காட்சிகளிலும் செய்தி பரப்பினார்கள். காலை 10 மணி முதல் கூட்டம் கூடத் தொடங்கி விட்டது. ஆனால் விஜய் வந்தது இரவு 7 மணி. இது யார் செய்த சதி?

கரூர் மாவட்ட எல்லையான வேலாயுதம்பாளையத்துக்கு மாலை 4.45 மணிக்கே வந்துவிட்டார். ஆனால் ஊருக்குள் வராமல் காலதாமதம் செய்தார். இது யார் செய்த சதி?

**விஜய் வாகனம் ஊர்ந்து வருவதால் அதனுடன் பல்லாயிரக்கணக்கானவர்கள் வருகிறார்கள். கூட்டம் பேசும் இடத்திலும் பல்லாயிரக்கணக்கில் ஆட்கள் காத்திருக்கிறார்கள். கூட்டம் பேசும் இடத்துக்குள் விஜய் வாகனம் வருகிறது. அவரோடு வந்தவர்களுக்கும், ஏற்கனவே அங்கு இருந்தவர்களுக்கும் தள்ளு முள்ளு ஏற்படுகிறது.**

**இப்படி நடக்கும் என்று காவல் துறை முன்கூட்டியே பயந்து த.வெ.க.வைச் சேர்ந்த புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார் ஆகிய இருவரிடமும் உயர் அதிகாரிகள் எச்சரித்தார்கள். ஆனால் அவர்கள் அலட்சியப்படுத்தினார்கள். விஜய்யும் அலட்சியப் படுத்தி விட்டார். பலியானார்கள் 41 பேர்.**

கரூர் டவுன் காவல் நிலையம் FIR No. 855/2025 என பதிவு செய்யப்பட்ட வழக்கு இது. இந்த சதிச் செயல்கள் அனைத்தும் வெளியில் தெரிந்து விடும் என்பதற்காக சி.பி.ஐ. விசாரணை கேட்டு ஓடியது விஜய் கும்பல். இந்த வழக்கு CBI–க்கு மாற்றப்பட்டது. CBI பதிவு எண்: RC2172025S0022, தேதி 18.10.2025, CBI/AC–II, நியூ டெல்லி காவல் நிலையம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. சி.பி.ஐ. இப்போது விசாரிக்கும் வழக்கில் அதன் விசாரணையைச் சிதைக்கும் வகையில், அதில் சாட்சி சொல்லும் போலீஸாரை மிரட்டும் வகையில் அமைச்சர் பேசி இருக்கிறார்.

"சம்பவம் நடந்த இடத்தில் இருந்து அக்கட்சியின் தலைவர் சென்று விட்டார்" என்று அப்போதே சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி செந்தில்குமார் கண்டித்தார். விஜய் ஒருவாரமாக வெளியில் வரவில்லை. ஒருவாரம் கழித்து அழுகாச்சி வீடியோ வெளியிட்டார். ஆதவ் அர்ஜுனா தலைமறைவாகி விட்டார். உயிரிழந்தோரின் குடும்பத்தினரை சென்னைக்கு வரவைத்து அவர்களிடம் ஆறுதல் சொன்னார் விஜய். இப்போது ஆட்சி மாறியதும் காட்சி மாறுகிறது. 'கணக்கு தீர்க்கப் போகிறார்களாம்'.

**கரூரில் விஜய் கட்சி வெற்றி பெறவில்லை. அ.தி.மு.க. தான் வெற்றி பெற்றது. விஜய் 41 பேரை தனது ஆணவத்துக்காக பலியிட்டார் என்பதை கரூர் மக்களே உறுதி செய்து விட்டார்கள். பல்வேறு ஊழல் புகார்களுக்கு ஆளான கரூர் எம்.எல்.ஏ. விஜயபாஸ்கரை ராஜினாமா செய்ய வைத்து அங்கு இடைத்தேர்தலுக்கு ஏற்பாடு செய்வதும் விஜய்யின் குரூர மனப்பான்மைதான். 'கரூரில் ஜெயித்துக் காண்பிக்கிறேன்' என்ற ஆணவம்தான். இடைத்தேர்தல் பரப்புரைக்கு போவதற்கு முன்னால் கரூருக்குப் போய் கணக்குக் காட்ட நினைக்கிறார் விஜய்.**

'ஊரான் வீட்டு நெய்யில உங்க குடும்பத்துக்கு ஸ்வீட் செய்யாதீங்க' என்பது விஜய் விட்ட டயலாக் ஆகும். தனது அலட்சியம், ஆணவத்துக்காகப் பலியான குடும்பத்துக்கு அரசு வேலை தர விஜய் திட்டமிட்டுள்ளார். 'இதுதான் ஊரான் வீட்டு நெய்யில ஸ்வீட் செய்வது ஆகும்' என்று சமூக வலைதளத்தில் பலரும் கொந்தளித்து வருகிறார்கள்.

விஜய் ஆட்சிக்கு வந்ததும் போட்ட கையெழுத்தே பழிவாங்கும் நடவடிக்கை தான். 19 போலீஸ் அதிகாரிகளை கரூரில் இருந்து வேறுவேறு ஊருக்கு மாற்றினார் விஜய். இப்போது வெளிப்படையாக அந்த 19 பேர் தான் காரணம் என்பதைப் போல பேசுகிறார் அமைச்சர். எதையாவது சொல்லி செந்தில்பாலாஜியை கைது செய்யத் துடிக்கிறார் விஜய். அடுத்தவர்கள் மீது பழியைப் போட்டு தப்பிக்கப் பார்க்கிறார். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் விஜய் இதில் இருந்து தப்ப முடியாது.

**விஜய்க்காக காத்திருந்து காத்திருந்து மூச்சுத் திணறி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 41. இதில் ஆண்கள் 13 பேர். பெண்கள் 18 பேர். குழந்தைகள் 10 பேர். இதில் ஆண் குழந்தைகள் 5, பெண் குழந்தைகள் 5. இந்தப் பாவம் சும்மா விடாது.**

## மதுரவாயலில் தூய்மைப் பணியாளர்களை அவமதித்த த.வெ.க.வினர்!

சென்னை, ஜூலை 8 –

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் த.வெ.க. சார்பில் போட்டியிட்ட ரேவந்த் சரண் வெற்றி பெற்றார். கடந்த 2 மாதங்களாக மதுரவாயல் எம்.எல்.ஏ. அலுவலகம் திறக்காமல் இருந்தது. இதனால் தொகுதி மக்கள் தங்கள் குறைகளை எங்கு கொடுப்பது என தெரியாமல் தவித்து வந்தனர். இந்த நிலையில் நேற்று மதுரவாயல் எம்.எல்.ஏ அலுவலகம் திறக்கப்பட்டது. இதனை த.வெ.க. அமைச்சர் புஸ்லி ஆனந்த் திறந்து வைத்தார்.

த.வெ.க. நிர்வாகிகளுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த நிலையில் அதனை அருகே இருந்த சென்னை குடிநீர் வாரிய அலுவலகத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அப்போது உணவு சாப்பிட்ட பின் எச்சை இலை எடுப்பதற்கும் அங்கு குப்பைகளை அகற்றுவதற்கும் சென்னை மாநகராட்சி 11 மண்டத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களை பயன்படுத்தியுள்ளனர். அவர்களது வார்டில் பணி இருந்தும் எம்.எல்.ஏ அலுவலக திறப்பு விழாவில் தூய்மை பணியாளர்களை எச்சை இலை எடுக்க வைத்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், கோவை மாநகர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் – தி.மு.க. மாநில தீர்மானக் குழுச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. நா.கார்த்திக் தனது புதல்வியின் திருமண வரவேற்பு விழா அழைப்பிதழை வழங்கினார்.

### பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யக் கோரி

## பவானி அருகே விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

ஈரோடு, ஜூலை 8 -

தமிழகம் முழுவதுமே விவசாயிகள் பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய கோரி கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாகவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி கூட்டுறவு பயிர்க்கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்யக் கோரி, ஈரோடு மாவட்டம் பவானி அருகே உள்ள பெரியபுலியூர் கூட்டுறவு வங்கி முன்பு முழக்கங்கள் எழுப்பி விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தல் வாக்குறுதியில் தமிழக விவசாயிகளுடைய கடன் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்த தேர்தல் வாக்குறுதிப்படி செயல்படாமல் இரண்டு கட்டமாக சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.75 ஆயிரமும் பெரிய விவசாயிகளுக்கு ரூ.35 ஆயிரம் வரையிலான பயிர் கடன் மட்டுமே தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஈரோடு மாவட்டம் பவானி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயிகள், தேர்தல் வாக்குறுதியில் அளிக்கப்பட்டவாறு சிறு, குறு விவசாயிகளின் பயிர்க்கடன்களை நிபந்தனையின்றி முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடன் தள்ளுபடி கிடைக்காததால் விவசாயிகள் பலர் மன உளைச்சலில் உள்ளதாகவும், இந்த விவகாரத்தில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

தற்போது இரண்டு கட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள தள்ளுபடி தொகையால் 20% விவசாயிகள் கூட பயனடைய மாட்டார்கள்.

எனவே பயிர் கடன் தள்ளுபடியை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

### தமிழக வரலாற்றில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாமல் நீதிமன்றங்கள் செயல்பட்டது கிடையாது!

## அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படாதது அரசு நிர்வாகத்தின் மிகப்பெரிய தவறு!

### அரசியலமைப்பு சட்டம் வகுத்திருக்கக்கூடிய விதிகள் மீறப்பட்டுள்ளன!

கோவை, ஜூலை 8 -

தமிழக வரலாற்றில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாமல் நீதிமன்றங் கள் செயல்பட்டது கிடையாது. அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப் படாதது அரசு நிர்வா கத்தின் மிகப் பெரிய தவறு, அரசியலமைப்பு சட்டம் வகுத்திருக்கக்கூடிய விதிகள் மீறப்பட்டுள்ளன என்று வழக்கறிஞர் கோபாலகிருஷ்ணன் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

கோவை மாவட்டத்தில் அரசு வழக்கறிஞர்களை நியமிக்காததால் கடந்த 5 நாட்களில் 300 வழக்குகள் தேக்கமடைந்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த ஜூன் 30ம் தேதியுடன் அரசு வழக்கறிஞர்களின் பணிக் காலம் முடிவடைந்தது.

அதன்பின், ஒரு வாரம் ஆகியும் அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படாமல் உள்ளதால் வழக்குகள் தேக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், உடனே அரசு வழக்கறிஞர்களை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும் என வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், கோவை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்கறிஞர் கோபாலகிருஷ்ணன் பத்திரிகையாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

சட்டமன்றத் தேர்தல் முடிந்து கடந்த 60 நாட்களாக உட்கட்சி பிரச்சினை, கட்சி தாவல், குதிரை பேரம், சோபா மாடல் போன்ற செய்திகள் மட்டுமே அதிகமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், நீதிமன்றத் தில் மிகப்பெரிய பிரச்சனை நிலவிவருகிறது. தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான கீழமை நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர்கள் கடந்த 5 நாட்களாக நியமிக்கப்படாததால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரானது.

தமிழக வரலாற்றில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாமல் நீதிமன்றங் கள் செயல்பட்டது கிடையாது. அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப் படாதது அரசு நிர்வா கத்தின் மிகப் பெரிய தவறு, இதனால் அரசியலமைப்பு சட்டம் வகுத்திருக்கக்கூடிய விதிகள் மீறப்பட்டுள்ளன.

தற்போது கோவையில் 24 பேர் அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட உள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு உரிய அரசாணை இன்னும் வெளிவரவில்லை.

அரசு வழக்கறிஞர் இன்மையால் கோவை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 5 நாட்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட பிணை வழக்குகள், சிவில் வழக்குகள் தேக்கமடைந்து இருக்கிறது. எனவே உரிய அரசாணை பிறப்பித்து அரசு வழக்கறிஞர்கள் விரைவில் நியமிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

### பல்லடம் அரசு மருத்துவமனையில்

## குடிநீர் இல்லாமல் தவிக்கும் நோயாளிகள்!

### உடனடியாக நடவடிக்கை எடுக்க கோரிக்கை!

திருப்பூர், ஜூலை 8 -

கோவை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் பல்லடம் அரசு மருத்துவமனை அமைந்துள்ளது. இங்கு தினமும் 800க்கும் அதிகமான புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் 90 உள் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

திருப்பூர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக டிஜிட்டல் எக்ஸ்ரே, இசிஜி. கர்ப்ப கால சிகிச்சை, குழந்தைகளுக்கான சிகிச்சை, தீவிர சிகிச்சை பிரிவு. அறுவை சிகிச்சை அரங்கு, கண் சிகிச்சை பிரிவு, கர்ப்பிணி பெண்களுக்கான நவீன ஸ்கேன் வசதி. பல் பரிசோதனை பிரிவு, சித்த மருத்துவம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் உள்ளன.

பல்லடம் அரசு மருத்துவமனைக்கு தினந்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட புறநோயாளிகள் வந்து செல்கின்றனர். நோயாளிகளை பார்க்க வரும் பொது மக்கள் என பலதரப்பட்ட மக்கள் வந்து செல்லும் இம் மருத்துவமனைக்கு போதிய அளவு குடிநீர் வினியோகம் கிடைப்பதில்லை. அதனால், மக்கள் அருகில் உள்ள கடைகளுக்கு சென்று குடிநீர் வாங்கி வந்து பயன்படுத்துகின்றனர். மருத்துவமனை நிர்வாகம் தங்களுக்கு கிடைக்கும் குடிநீரை பகிர்ந்து மக்களுக்கு வழங்கி வருகிறது.

அனைத்து வார்டுகளிலும் தேவையான இடங்களில் தூய்மையான குடிநீர் வழங்கிட இயந்திரம் உள்ளது.

ஆனால் குடிநீர் தான் இல்லை என்ற நிலை இருந்து வருகிறது. இக்குறையை போக்கும் வகையில் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு தேவையான அளவு குடிநீரை வழங்கிட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு முன்னிலையில் அ.தி.மு.க.விலிருந்து விலகி மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கே.ஸ்ரீஜேஷ் தலைமையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். உடன் கூடலூர் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் பிரேம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.